இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 24-02-2025

# முதலமைச்சரின் போர்க்குரல்

கல்விக்காக, பள்ளிக் குழந்தைகளுக்காக, ஆசிரியப் பெருமக்களுக்காக செலவு செய்யும் தொகையைத் தர முடியாது என்று ஆணவத்துடன் இருக்கிறது ஒன்றிய அரசு. இந்த ஆணவத்துக்கு போர்க்குணத்துடன் பதிலடி தந்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**“பி.எம்.ஸ்ரீ திட்டத்தை ஏற்காததால் தமிழ்நாடு 5 ஆயிரம் கோடி ரூபாய் இழக்கிறது என்று சொல்லும் ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களே! தமிழ்நாட்டில் இருந்து நீங்கள் வாங்கிக் கொண்டு இருக்கும் வரியைத் தர மாட்டோம்’ என்று சொல்ல எங்களுக்கு ஒரு நொடி போதும்... மறந்துவிடாதீர்கள்”** என்று எச்சரிக்கை செய்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இதுதான் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு புரியும் பாணியாகும். அதன்பிறகாவது இப்பிரச்சினையின் தீவிரத்தை புரிந்து கொள்வார்களா என்று தெரியவில்லை.

சமூக வலைத் தளங்களில் முதலமைச்சரின் போர்க்குரலுக்கு மிகுந்த வரவேற்பு இருந்தது மட்டுமல்ல, அதன் நியாயத்தை பலரும் எழுதத் தொடங்கி இருக்கிறார்கள். ஒருவர் சமூக வலைத்தளத்தில் பட்டியலையே பதிவு செய்திருந்தார்.

1. கல்வி நிதி குறைப்பு
2. பட்டியல் பழங்குடியின மேம்பாட்டு நிதி நிறுத்தம்
3. இரயில்வே திட்டங்களுக்கு குறைவான நிதி ஒதுக்கீடு
4. புயல் நிவாரண நிதி மறுப்பு
5. சாலை வளர்ச்சி திட்டங்களில் ஒதுக்கீடு குறைவு
6. மருத்துவமனை அமைக்கும் திட்டங்களில் தாமதம் (எ.கா: மதுரை எய்ம்ஸ்)
7. ஒன்றிய அரசின் மும்மொழிக் கொள்கை காரணமாக தமிழ்மொழிக்கு ஆதரவு குறைவு
8. தேசிய திட்டங்களில் தமிழ்நாட்டிற்கு குறைந்த பங்கு
9. தொழில்துறை மானியம் குறைப்பு
10. சுற்றுச்சூழல் தொடர்பான நிதி ஒதுக்கீடு குறைவு
11. நகர்ப்புற மேம்பாட்டு நிதி குறைப்பு
12. கிராமப்புற வளர்ச்சி திட்டங்களில் குறைவான நிதி
13. நீர்ப்பாசன திட்டங்களுக்கு ஒன்றிய அரசின் உதவி இல்லாமல் போனது
14. சிறுபான்மையினர் நலத்திட்டங்களுக்கு ஒதுக்கீடு குறைவு
15. தொழிலாளர்கள் நலத்திட்டங்களில் நிதி குறைப்பு
16. தமிழகத்தில் ஒன்றிய அரசின் புதிய நிறுவனங்கள் ஏற்படுத்த மறுப்பு
17. இயற்கைப் பேரிடர் நிவாரண நிதி குறைப்பு
18. குடிநீர் வசதிக்கான நிதி குறைப்பு
19. தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கத்தில் மெதுவான செயல்பாடு
20. மாநில திட்டங்களுக்கு ஒன்றிய நிதி ஒதுக்கீட்டில் தாமதம்
21. சென்னை மெட்ரோ இரண்டாம் கட்டத்திற்கான நிதி தாமதம்
22. தேசிய நிறுவனங்களின் தலைமையகம் தமிழ்நாட்டில் அமைக்க மறுப்பு
23. ஒன்றிய அரசின் தொழில் முனைவோர் ஊக்கத்திட்டங்களில் தமிழ்நாட்டிற்கு குறைவான ஆதரவு
24. தமிழ்நாட்டிற்கு கடலோரப் பாதுகாப்பு திட்டங்களில் குறைந்த முக்கியத்துவம்
25. ஒன்றிய அரசின் விவசாய நிதி திட்டங்களில் தமிழ்நாட்டிற்கு நிதி குறைவு
26. தமிழ்நாட்டில் பாதுகாப்பு உற்பத்தி நிறுவனங்களை அமைக்காமல் தவிர்ப்பு
27. ஒன்றிய நிதி ஆதரவுடன் நடைபெறும் குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்களில் குறைவு
28. தேசிய ஆராய்ச்சி நிறுவனங்களுக்கான ஒன்றிய நிதி ஒதுக்கீடு தமிழ்நாட்டில் குறைவு
29. ஒன்றிய அரசு உதவியுடன் செயல்படும் திறன் மேம்பாட்டு திட்டங்களில் தமிழ்நாட்டிற்கு குறைவான பங்கு
30. மாநிலத்தில் ஒன்றிய கல்வி அமைப்புகள் அமைப்பதில் மேன்மை அடையாத நிலை

- என்று பட்டியலிட்டுள்ளார் அவர். இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். எதையுமே செய்யாமல் தமிழ்நாட்டையும் உள்ளடக்கி ஆள்வதால் என்ன பயன்?

ஒரு காலத்தில் ஒரு மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தவர் நரேந்திர மோடி. மாநில முதலமைச்சராக இருந்த போது மாநில சுயாட்சிக்காகக் குரல் எழுப்பியவர்தான் நரேந்திரமோடி. ஆனால் இன்று அவர் அனைத்தையும் மறந்து சர்வாதிகாரத்தனத்துடன் செயல்பட்டு வருகிறார்.

2014 ஆம் ஆண்டு ஏப்ரல் 8 ஆம் தேதியன்று பா.ஜ.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் ....

❖ மறைமுக வரிவிதிப்பில் சீர்திருத்தம் செய்ய அனைத்து மாநில அரசுகளுடனும் ஆலோசனை செய்வோம்.

❖ மாநில முதல்வர்களையும் சமமாகக் கருதி - தேச நிர்மாணப் பணிகளில் ஈடுபடுத்துவோம்

❖ மாநில அரசுகளுக்கு அதிக அளவில் நிதி அதிகாரங்களை வழங்குவோம்

❖ மாநிலப் பிரச்சினைகளுக்கு தொடர்புடைய மாநிலங்களுக்கு இடையே கவுன்சில் அமைத்து தீர்வு காண்போம் - என்று சொல்லப்பட்டது. அதைச் செய்யுங்கள் என்றுதான் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள்.

**“குஜராத் மக்கள் ரூ.60 ஆயிரம் கோடியை டெல்லிக்கு அனுப்புகிறார்கள். ஆனால் திரும்ப வருவது மிகக் குறைவு. குஜராத் என்ன பிச்சைக்காரர்கள் மாநிலமா?” என்று 6.12.2012 அன்று குஜராத் முதலமைச்சராக இருக்கும் போது கேட்டவர்தான் மாண்புமிகு நரேந்திரமோடி அவர்கள். அதைத்தான் இன்று தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள்.**

**தமிழ்நாட்டு முதலமைச்சர் பேச்சை கேட்க மறந்தாலும், மோடி பேச்சை மோடி கேட்பாரா?**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.2.2025) சென்னை, கொளத்தூரில் நடைபெற்ற கொளத்தூர் கிழக்கு பகுதிச் செயலாளரும்,தி.மு.க. ஐ.சி.எப் லேபர் யூனியன் பொதுச் செயலாளருமான முரளிதரன் – திருமதி லதா தம்பதியரின் மகன் மகேஷ்வர் – திவ்யகணபதி ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து,மணமக்களை வாழ்த்தினார். உடன் கழக துணை பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு,பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மேயர் ஆர். பிரியா, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஆர்,கிரிராஜன் எம்.பி.,சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, த.வேலு, சுதர்சனம்,ஆர்.டி. சேகர், அ.வெற்றியழகன், இ.பாந்தாமன்,ஜெ.ஜெ.எபிநேசர், ஜோசப் சாமுவேல், கழக செய்தி தொடர்பு தலைவா டி.கே.எஸ். இளங்கோவன்,தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ரங்கநாதன். தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட, பகுதி, வட்டக் கழகச் செயலாளர்கள், கொளத்தூர் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் நாகராஜன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### கொளத்தூர், பெரியார் நகரில் புதிதாக கட்டப்பட்டுள்ள மருத்துவமனைக்கு

# “பெரியார் அரசு மருத்துவமனை” - முதல்வர் பெயர் சூட்டினார்!

## பெரியார் அரசு மருத்துவமனையை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று நேரில் ஆய்வு!

சென்னை, பிப்.24-

கொளத்தூர், பெரியார் நகரில் புதிதாக கட்டப்பட்டுள்ள மருத்துவ மனைக்கு “பெரியார் அரசு மருத்துவமனை” என்று பெயர் சூட்டிட முதலமைச்சர் மு.க. ஸ்டா லின் அவர்கள் ஆணையிட்டு இப்புதிய மருத்துவமனை மற்றும் முதல்வர் படைப்ப கத்திற்கு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று ஆய்வு செய்தார்.

இது பற்றிய விவரம் வருமாறு:-

சென்னை, கொளத்தூர், பெரியார் நகரில் உள்ள அரசு புறநகர் மருத்துவமனை வளாகத்தில் 210 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரை மற்றும் ஆறு தளங்களுடன் புதிய மருத்துவ மனை கட்டப்பட்டுள்ளது. இம்மருத்துவ மனைக்கு “பெரியார் அரசு மருத்துவமனை” என்று பெயர் சூட்டிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார். இம்மருத்துவமனை விரைவில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்க ளால் திறந்து வைக்கப்பட வுள்ளது.

பெரியார் நகரில் உள்ள அரசு புறநகர் மருத்துவமனையை சிறப்பு மருத்துவ மனையாக தரம் உயர்த்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 8.3.2023 அன்று மூன்று தளங்களுடன் புதிய மருத்துவமனை கட்ட அடிக்கல் நாட்டினார். அதன் தொடர்ச்சியாக, மேலும் சில சிறப்பு சிகிச்சைகளை வழங்குவதற்காக கூடுதலாக மூன்று தளங்களுடன் விரி வாக்கம் செய்திட 7.3.2024 அன்று முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

மொத்தம் ஆறு தளங்களுடன் கட்டப்பட்டுள்ள இப்புதிய மருத்துவ மனையின் தரைத் தளத்தில் 20 படுக்கைகள் கொண்ட தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சிகிச்சை முனைப்பு வார்டுகள், எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வசதி, புற நோயாளி கள் பிரிவுகள், முதல் தளத்தில் மகப்பேறு பிரிவு, அறுவை அரங்கங்கள், நவீன இரத்த வங்கி, இரண்டாம் தளத்தில் பெண்கள் மற்றும் குழந்தை களுக்கான மருத்துவப் பிரிவுகள், மூன்றாம் தளத்தில் மகப்பேறு மற்றும் குடும்ப கட்டுப்பாடு வார்டு, நான்காம் தளத்தில் ஆண்கள் பொது மருத்துவப் பிரிவு, இரைப்பை குடலியல் பிரிவு, ஐந்தாம் தளத்தில் இருதயவியல் பிரிவு, அறுவை அரங்கங்கள், தோல்நோய் வார்டு, ஆறாம் தளத்தில் சிறப்பு சிகிச்சை வார்டு கள், புற்று நோயியல் பிரிவு, நரம்பியல் பிரிவு போன்ற பல்வேறு பிரிவுகளுடன் மொத்தம் 260 படுக்கை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

இப்புதிய மருத்துவ மனை யினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.2.2025) நேரில் சென்று பார்வை யிட்டு ஆய்வு செய்தார்.



**முதல்வர் படைப்பகத்திற்கு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று ஆய்வு!**

சென்னை, கொளத்தூர், ஜெகநாதன் தெருவில் வட சென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ். பகிர்ந்த பணியிட மையம் மற்றும் மாணவர்களுக்கான “கல்வி மையம்” உள்ளிட்ட அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள முதல்வர் படைப்பகத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.2.2025) நேரில் சென்று பார்வையிட்டு, அங்கு படிக்கும் மாணவ, மாணவியர்கள் மற்றும் கோஓர்க்கிங் ஸ்பேஸ் எனப்படும் பகிர்ந்த பணியிடத்தில் பணிபுரி வோர்களிடம் உரையாடி, அவர்களின் தேவைகள் குறித்து கேட்டறிந்தார்.

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் இணைந்து 2.85 கோடி ரூபாய் செலவில் பகிர்ந்த பணியிட மையம் எனப்படும்

“Coworking Space” மற்றும் மாணவர்களுக்கான “கல்வி மையம்” என அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய முதல்வர் படைப்பகத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 4.11.2024 அன்று திறந்து வைத்தார்.

முதல்வர் படைப்பகத்தில் UPSC, TNPSC போன்ற பல்வேறு வகையான போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளும் மாணவர்கள், படித்து பயன்பெறும் வகையில் அவர்களுக்கு தேவை யான அனைத்து போட்டித் தேர்வுக்கான புத்தகங்களும் இடம் பெற்றுள்ளன. மேலும், மாணவர்கள் எந்த இடையூறுமின்றி படிக்கும் வகையில் அமைதியான சூழ லும், நீண்ட நேரம் படிப்பதற்கு உகந்த இருக்கைகள், கணினி மற்றும் இணையதள வசதியும் செய்து தரப்பட்டுள்ளன. இக்கல்வி மையத்தில் தினமும் சுமார் 100 மாணவ, மாணவியர்கள் படித்து பயன் பெற்று வருகின்றனர்.

அத்துடன், போதிய இடவசதி இல்லாத காரணத்தினால் தொழில் தொடங்கிட இயலாத பெண்களுக்கும். ஆண் களுக்கும் தொழில் தொடங்குவதற்கு ஏதுவாக கோஓர்க்கிங் ஸ்பேஸ் எனப்படும் பணி செய்வதற்காக ஒரு தளமும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த தளத்தில் சுமார் 40 நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

இந்த ஆய்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ. ராசா, டாக்டர் கலாநிதி வீராசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### முதல்வரின் உத்தரவு:

# அரசு அலுவலர் சங்கங்களின் கோரிக்கைகளை பரிசீலித்து உரிய முடிவெடுக்க குழு!

## அமைச்சர்கள் இன்று பேச்சுவார்த்தை!

சென்னை, பிப்.24-

பல்வேறு தமிழ்நாடு அரசு அலுவலர் சங்கங்களின் கோரிக்கைகளை பரிசீலித்து அவற்றின் மீது உரிய முடிவுகளை காணும் பொருட்டு தமிழக முதலமைச்சர் அவர்கள் அமைச்சர்கள் அடங்கிய ஒரு குழுவினை அமைத்து ஆணையிட்டுள்ளார்.

இந்தக் குழுவில் பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி கயல்விழி செல்வராஜ் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

அரசு ஊழியர் சங்கங்களின் கோரிக்கைகள் குறித்து சங்க நிர்வாகிகளுடன் இன்று தலைமைச் செயலகத்தில் அமைச்சர்கள் பேச்சு வார்த்தை நடத்த உள்ளனர்.